வெ.எண் 1 நாள் : 01.08.2018

# தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களுக்கு நடைபெறவுள்ள கடன் வழங்கும் முகாமிற்கு தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2018-19 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களுக்கு 02.08.2018 அன்று மாலை 4.00 மணியளவில் மாவட்ட ஆட்சியரகத்திலுள்ள பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்ட அரங்கத்தில் கடன் வழங்கும் முகாம் (லோன் மேளா) நடைபெற உள்ளதால், தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**பொதுக்காலக்கடன் திட்டம் / தனிநபர் கடன் திட்டம்** (திட்டம் - I)ன்கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.50,000/- முதல் அதிகபட்சம் ரூ.20.00 இலட்சமும் திட்டம் - II ன்கீழ் அதிகபட்சம் ரூ.30.00 இலட்சம் வரையிலும் கடன் உதவி வழங்கப்படும். இக்கடனுக்கான வட்டி விகிதம் ஆண்டிற்கு ரூ.50000க்குள் இருப்பின் 5% மும், அதற்கு மேல் ரூ.20.00 இலட்சம் வரை கடன் பெறுபவர்களுக்கு 6% மும், திட்டம் - II ன்கீழ் பயனாளி பெண்ணாக இருப்பின் ஆண்டிற்கு 6% மும், ஆணாக இருந்தால் ஆண்டிற்கு 8% மும் செலுத்தப்பட வேண்டும்.

**சுயஉதவிக்குழுக்கான சிறு தொழில் கடன் திட்டம்** (திட்டம் - I) ன்கீழ் ஒரு குழுவில் ஒரு நபருக்கு அதிகபட்சம் ரூ.1,00,000/- மும் அதற்கான வட்டித்தொகை ஆண்டிற்கு 7% வரை வட்டி செலுத்த வேண்டும். திட்டம் - II ன்கீழ் ஒரு குழுவில் ஒரு நபருக்கு அதிகபட்சம் ரூ.1.50 இலட்சமும் அதற்கான வட்டித்தொகை பெண் பயனாளிக்கு ஆண்டிற்கு 8% மும், ஆண் பயனாளிக்கு 10% மும் செலுத்தப்பட வேண்டும்.

**கல்விக்கடன் திட்டம்-** திட்டம் - I ன்கீழ் 1 வருட குறுகிய கால உயர் திறன் வளர்ச்சி படிப்புக்கு - 3.00 இலட்சம் வரையிலும், தொழில்கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகளுக்கு அதிகபட்சம் 5 வருடங்களுக்கு வருடத்திற்கு 3.00 இலட்சம் வீதம் அதிக பட்சம் 15.00 இலட்சம் வரையிலும், அதிகபட்சம் 3 வருட கால முதுகலை தொழில்கல்வி, தொழில்நுட்பக்கல்வி படிப்புகளுக்கு 3 வருடத்திற்கு ரூ.3.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் 9.00 வரையிலும், 5 வருட கால வெளிநாட்டில் தங்கி தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி படிக்கும் படிப்புகளுக்கு வருடத்திற்கு ரூ.4.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் 20.00 இலட்சம் வரையிலும் கல்விக் கடன் வழங்கப்படும். இதற்கு வட்டித்தொகையாக 3% மும் செலுத்த வேண்டும்.

திட்டம் - II ன்கீழ் 1 வருட குறுகிய கால உயர் திறன் வளர்ச்சி படிப்புக்கு - 3.00 இலட்சம் வரையிலும், தொழில்கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகளுக்கு வருடத்திற்கு 4.00 இலட்சம் வீதம் அதிக பட்சம் 20.00 இலட்சம் வரையிலும், முதுகலை தொழில்கல்வி, தொழில்நுட்பக்கல்வி படிப்புகளுக்கு வருடத்திற்கு ரூ.3.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் 9.00 வரையிலும், 5 வருட கால வெளிநாட்டில் தங்கி தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி படிக்கும் படிப்புகளுக்கு வருடத்திற்கு ரூ.6.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் 30.00 இலட்சம் வரையிலும் கல்விக் கடன் வழங்கப்படும். இதற்கு வட்டித்தொகையாக மாணவர்களுக்கு 8% மும், மாணவிகளுக்கு 5% மும் செலுத்த வேண்டும்.

இக்கடன் திட்டங்களுக்கு விண்ணப்பிக்க தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினர் இனத்தவர்களாக இருத்தல் வேண்டும். தனிநபர் ஆண்டு வருமானம் கிராமப்புறமாயிருப்பின் அதிகபட்சமாக ரூ.81,000/- ஆகவும், நகர்ப்புறமாயிருப்பின் ரூ.1,03,000/- ஆகவும் இருந்தால் திட்டம் - I ன்கீழ் விண்ணப்பிக்கலாம். குடும்ப ஆண்டு வருமானம் அதிகபட்சம் ரூ.6 இலட்சம் வரை இருந்தால் திட்டம்-IIன்கீழ் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும். சுய உதவிக்குழு தொடங்கி 6 மாதங்கள் பூர்த்தியாகி இருக்க வேண்டும். திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) அவர்களால் தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட ஆட்சியரகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக தொலைபேசி எண். 04362-278416 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.